**Sub Court, Eraniel**

**O.S. No.137/2023**

Date:15.09.2025.

வா.சா.1 - திரு. லொரேட்டா

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது சொந்தஊர் மேக்கா மண்டபம் என்றால், சரிதான். எனது முகவரியில் கதவு எண்.3/243 யின் உள்ள வீட்டினை 2022 ல் பால்காய்சினோம் என்றால், 2019 ல் பால் காய்சினோம். 2022 வரையில் நான் வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டில் குடியிருந்தோம் என்றால், சரியல்ல. எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள். ஆன் ரெனிஷா, ஆன் ரியாஷா. தற்போது என்னிடம் காட்டப்படும் எனது மூத்த பெண் ஆன் ரெனிஷா வின் ஆதார் கார்டு என்றால், சரிதான் அதன் அசல் பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது முகவரி திருத்ததிற்காக கொடுக்கப்பட்டது, ஆனால் மீண்டும் அதே முகவரியில் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆதார் அடையாள அட்டை பி.வா.ச.ஆ–1 ல் 19.11.2015 ல் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–1 உள்ள முகவரி வழக்கு சொத்தில் உள்ள 4/155, பண்டாரகாடு என்ற முகவரி உள்ளது என்றால், சரிதான். அப்போது எனது மகன் பாட்டி வீட்டில் இருந்தாள். நானும் எனது கணவரும், இரண்டு பிள்ளைகளும் வழக்கு பட்டிகை சொத்தில் தான் 2022 வரை குடியிருந்தோம் என்றால் சரியல்ல. 2015 ல் நாங்கள் தனியாக வீடு எடுத்து தங்கியிருந்தோம். நான் புதுவீடு கட்டி போகும் வரையில் வழக்கு பட்டிகை சொத்தில் தான் குடியிருந்தேன் என்றால், சரியல்ல. எனது இரண்டு பிள்ளைகளும் பண்டாரகாடு ஆட்லின் மெட்ரிக் பள்ளியில் படித்தார்கள் என்றால், சரிதான். வழக்கு பட்டிகை

சொத்தில் இருந்து அந்த பள்ளி நடந்து செல்ல கூடிய தூரத்தில் தான் உள்ளது என்றால், சரிதான். எனது தகப்பனார் 3ம் பிரதிவாதியான எனது தம்பி ரெஜிஸ்க்கு வழக்கு பட்டிகை சொத்தை செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கும்போது நான் அந்த வீட்டில் தான் இருந்தேன் என்றாலும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், சரியல்ல. எல்லா விபரங்களும் தெரிந்து நான் காலவரையறையிலிருந்து தப்பிப்பதற்காக 2023ல் விபரங்கள் தெரிந்ததாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது பெற்றோர் 3 பசுமாடுகள் வைத்திருந்தார்கள். அந்த வருமானத்தில் தான் எங்களை எங்கள் பெற்றோர் படிக்க வைத்தார்கள் என்றால், சரியல்ல. எனது சித்தி டீச்சராக இருந்தார், அவர் தான் என்னையும் தங்கச்சியையும் , தம்பியையும் படிக்க வைத்து திருமணம் செய்து வைத்தார். எனது சித்திக்கு 3 பெண் பிள்ளைகள் உண்டு என்றால், சரிதான். எனது சித்தியின் வருமானம் அவருடைய பிள்ளைகளை பராமரிப்பதற்கு தான் போதுமானதாக இருக்கும் என்றால், எனது சித்தி மற்றும் சித்தப்பா அரசு பள்ளியில் ஆசிரியர்கள் என்பதால் அவர்கள் தான் எங்களை பராமரித்தார்கள். எனது சித்தி மற்றும் சித்தப்பா அரசு பள்ளியில் ஆசிரியர்களாக இருந்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்தும், கூடுதல் சொத்துகளும் எனது தகப்பானர் லூயிஸ்க்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். அந்த சொத்தில் அவருக்கு முழு உரிமையும் அதிகாரமும் உண்டு என்றால், சரிதான். அந்த உரிமையில் தான் எனது தகப்பனார், எனது தம்பிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால், தாய் பத்திரம் என்னிடம் உள்ளது. நான் M.A. M.phil படித்திருக்கிறேன், வின்ஸ் Engineering College ல் நான் பேராசிரியராக

பணியில் இருக்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் 25.4.2012 தேதியிட்ட சர்க்குலரில் அடிப்படையில் அசல் ஆவணம் இல்லாமல் புதிதாக செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு முடியாது என்றால், சர்க்குலரை படித்து பார்த்துவிட்டு சாட்சி, எனது அப்பா செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துவிட்டு தாய்பத்திரத்தை என்னிடம் கொடுத்திருப்பார் என்று சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ–8 3ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணத்தில் எனது தாயாரும் சாட்சி கையொப்பம் போட்டிருக்கிறார் என்றால், எனது பெற்றோரை கஷ்டப்படுத்தி எனது தம்பி எழுதி வாங்கினார். இதுபற்றி எனது பெற்றோர் என்னிடம் கூறியிருக்கிறார்கள். இந்த விபரங்கள் அனைத்தும் தெரிந்த நான், உண்மைக்கு புறம்பாக செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரியாது என்று வழக்கு செய்கிறேன் என்றால் சரியல்ல. பதிவு துறை சர்குலரின் படி அசல் ஆவணம் கைவசம் இல்லை என்றால், அசல் இல்லை என்று பத்திரிக்கை விளம்பரம் கொடுத்து, காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, கண்டுபிடிக்க முடியவில்லை என்று சான்று பெற்ற பின்னர் தான் புதிதாக ஆவணம் பதிவு செய்ய முடியும் என்றால், தாய் பத்திரம் செட்டில்மென்ட் ஆவணம் என்னிடம் தான் உள்ளது. நாங்கள் கிறிஸ்தவ நாடார் இனம் என்றால், சரிதான். எங்கள் சமுதாயத்தில் பெண் கொடுக்கவேண்டும் என்றால் மாப்பிள்ளைக்கு குறைந்த பட்சம் ஒரு வீடு அல்லது இடமாவது இருக்கவேண்டும் என்றால், சரிதான். எனது சகோதரர் 3ம் பிரதிவாதிக்கு பெண் பார்க்க துவங்கும்போது அவர் பெயரில் வீடோ நிலமோ இல்லை என்றால், சரிதான். 3ம் பிரதிவாதிக்கு வீடோ, நிலமோ இல்லாத காரணத்தினால் அவருக்கு பெண் கிடைக்கவில்லை என்பதால் நானும், மற்ற இரண்டு சகோதரிகள் மற்றும் என் பெற்றோரும் சேர்ந்து வா.சா.ஆ–8

ஆவணத்தினை என் தம்பியின் பேரில் ஏற்படுத்தினோம் என்றால், சரியல்ல. 3ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு பின்னர், எனக்கும் 3ம் பிரதிவாதியின் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக உண்மைக்கு புறம்பான விபரங்களுடன் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் நானும் எனது கணவரும் சேர்ந்து எனது இரண்டு தங்கைகளின் திருமணத்தினை நடத்தி, எனது தம்பியை வெளிநாட்டிற்கு அனுப்பியதாக தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றாலும், அந்த அளவிற்கு தனியார் பள்ளி ஆசிரியராக பணியில் இருந்த எனக்கு வருமானம் கிடையாது என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதி புனிதா எனது தகப்பனாருக்கு பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டதாக தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றாலும், அவர் பக்கத்து ஊரில் தான் இருந்தார் என்றாலும், வாரம் ஒருமுறை வந்து பார்த்துக்கொள்வார். வழக்கு பட்டிகை சொத்தில் நானும் எனது பெற்றோருடன் இருந்ததால் எங்கள் எல்லாரையும் பார்க்க 2ம் பிரதிவாதி வருவார் என்றால், சரியல்ல. 3ம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால், சரிதான். அந்த வருமானத்தில் தான் எனது மற்றும் எனது தங்கைகளின் திருமணத்தின்போது ஏற்பட்ட கடன்களை எனது பெற்றோர்கள் திருப்பி செலுத்தினார்கள் என்றால், சரியல்ல. அவர் 2010ல் தான் சௌதி அரேபியாவிற்கு சென்றார். அவ்வாறு எனது தம்பி கடன்களை அடைக்க உதவியதற்கு பிரதிபலனாக தான் வா.சா.ஆ–8 செட்டில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. எனது தாயாரை அடித்ததாக காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு ஆதரவாக புகார் ஏற்பு சான்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், புகார் கொடுத்தோம் என்று சாட்சி கூறுகிறார். நான் புகார் ஏதும் கொடுக்காததால்

தான் என்னால் புகார் ஏற்பு சான்று தாக்கல் செய்யமுடியவில்லை என்றால், சரியல்ல. காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று மேல் அதிகாரிகளிடம் நான் புகார் கொடுக்கவில்லை என்றால், சரிதான். 3ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் அவருக்கு முழு உரிமைப்பட்ட சொத்தினை தான் செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தார் என்றாலும், அதனால் நான் அந்த சொத்து குறித்து பாகபிரிவினை எதுவும் கேட்கமுடியாது என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.